# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

MARCH
2024




C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 7 |
| பெண்கள் பகுதி | 9 |
| அறிந்து கொள்வோம் | 12 |
| True Worship That Liberates | 13 |
| இனிய இல்லறம் | 15 |
| Church History | 18 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 21 |
| Kids Corner | 22 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 24 |
| Daily Bible Reading | 26 |
| ஆராதனை தியானப் பொருள் | 27 |



# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரிலே அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து, பராமரித்து வழி நடத்தி வந்த கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்த மாதம் நடந்த அனைத்து ஊழியங்களிலும் உற்சாகமாய் பங்கு பெற்ற உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாக 4-ம் தேதி மற்றும் 11-ம் தேதி நடைபெற்ற பெண்கள் ஐக்கிய சங்க மனப்பாடத் தேர்வு, வேத வினா தேர்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது, தேர்வில் பங்கு பெற்ற பெண்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

“லெந்து” காலங்களுக்கு உள்ளாக பிரவேசித்திருக்கின்ற நாம், இந்த சிறப்பு நாட்களில் அதிக நேரத்தை திருமறை வாசிப்பதிலும், நம்முடைய தனி தியானத்திலும், ஜெபத்திலும், உபவாசத்திலும், நம்மை பரிசோதனை செய்வதிலும் நம்முடைய நேரங்களை செலவிடுவோம். இந்த லெந்து காலங்கள் நம்முடைய வாழ்வில் பழைய துளிர்களை உதிர்த்து புதிய துளிர்கள் விடுகின்ற காலமாக இருக்க கடவுள் நமக்கு துணை புரிவாராக. சிறப்பாக இந்த

லெந்து காலங்களில் வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தில் நடைபெறுகின்ற சிறப்பு கூடுகைகளில் அனைவரும் பங்குபெறும்படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த லெந்து காலங்களில் பரிசுத்த வாரத்தில் 25,26,27 ஆகிய தேதியில் நடைபெறுகின்ற லெந்து கால சிறப்பு Convention-Q™ Rev.John Samuel ponnuswamy (Former Principal Gurukal Theological Seminary) அவர்கள் நம் மத்தியிலே கடந்து வந்து ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள இருக்கிறார்கள். அவர்களுடைய பயணங்களுக்காகவும் அவருடைய ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளும் படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதத்தில் குறிப்பாக தேர்வு எழுதுகின்ற நம்முடைய பிள்ளைகளுக்காக, ஆண்டவர் சிறப்பு ஞானத்தையும், சுகத்தையும், பெலத்தையும் அருளும் படியாக நாம் ஜெபிப்போம்.

V.B.S.2024. பிள்ளைகளுக்கான இந்த ஆண்டின் விடுமுறை வேதாகம பள்ளி ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை நமது ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற இருக்கிறது. இந்த ஆண்டு V.B.S.2024 Convener ஆக Mrs.Nancy Agustin அம்மா அவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை திருச்சபையின் சார்பாக வாழ்த்துகின்றோம். பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை தவறாமல் அனுப்பிக் கொடுக்கும்படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து நம்முடைய சபையின் ஊழியங்களுக்காகவும் வளர்ச்சிக்காகவும் ஜெபித்துக் கொள்ளும் படியாக உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன் ஆண்டவர் தாமே நம்மை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

இறைபணியில்
அருள்திரு. J.ஜான் ஜெபலின் ஜோஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சங்கீதம் 122:1 “கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்.” சமீபத்தில் ஒரு சகோதர் இந்திய தேசத்திலிருந்து குடும்பச் சூழ் நிலையின் காரணமாக பணியைத் தேடி இந்த தேசத்திற்கு வந்த வேலையில் கண்ணீரோடு பகிர்ந்த காரியம் என்னவென்றால், தான் இந்திய தேசத்தில் ஆலய ஆராதனைகளை அலட்சியப்படுத்தினதுண்டு ஆனால் இன்று கர்த்தரை அவரது ஆலயத்தில் ஆராதிக்க வாஞ்சையோடு இணையத்தில் தேடி ஆயரை தொடர்பு கொண்தாக கூறினார். அப்பொழுது என் கடந்த கால நாட்களையும் நினைவு கூர்ந்தேன். மெய்யாகவே கர்த்தருடைய ஆலயத்தில் ஆண்டவரின் பிரசன்னமும், திருச்சபையில் நாம் பெற்றுக் கொள்ளும் ஐக்கியமும் நமக்கு மிகுந்த மகிழ்சியையும், ஆறுதலையும், சமாதானத்தையும் தருவதற்காக நாம் ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம்.

கடந்த மாதம் முழுவதும் நம்மை வழுவாது காத்த தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

லெந்து கால சிறப்பு திருவிருந்து ஆராதனை, வெள்ளிக் கிழமைகள் தோறும் மாலை 8.00 மணி முதல் 9.00 மணிவரை St. Paul's Sanctuary - ல் வைத்து நடைபெறுகிறது. திருச்சபையார் யாவரும் தவறாமல் பங்குபெறும்படி அழைக்கின்றோம்.

இந்த வருட லெந்து கால கன்வென்ஷன் கூட்டங்கள் மார்ச் 25ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடைபெறும். அந்த நாட்களில் கர்த்தருடைய வார்த்தையை நம்மோடு பகிர்ந்து கொள்ளவிருக்கும் Rev. David John Samuel அவர்களுக்காக, அவர்களது பிரயாணங்களுக்காக, பரிசுத்த வார கூடுகைகளுக்காக ஜெபிக்கும் படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த மாதம் பெண்கள் ஐக்கிய சங்கம் சார்பாக நடைபெற்ற வேத வினாத் தேர்விலும் மனன வசன தேர்விலும் பங்கு பெற்ற சகோதரிகள் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும், மேலும், அத்தேர்வுகளை சிறப்பாக முன்னின்று நட த்தின ஆயர் அம்மா அவர்களுக்கும் நிர்வாக் குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது திருச்சபையில் கடந்த 18 ஆண்டுகள் உறுப்பினராக இருந்து, பாடகர் குழு, தன்னார்வப் பணியாளர் மற்றும் நிர்வாக் குழு உறுப்பினர் என்று பல்வேறு ஊழியங்களில் தன்னை ஈடுபடுத்தி சிறப்பான பங்களிப்பை வழங்கி மீண்டும் தாயகம் திரும்பும் அன்பு சகோதர் Bro. Kingston Jeyapaul அவர்களுக்குத் திருச்சபையின் சார்பிலும், நிர்வாக் குழுவின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன் தாமே தொடர்ந்து அவர்களது எதிர்காலத் திட்டங்களில் உடனிருந்து ஆசீர்வதிக்கும்படியாக திருச்சபையார் ஜெபிக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

கர்த்தருடைய ஆலயத்தை வாஞ்சிக்கும் போது, சங்கீதம் 122:7-ல் சொன்னபடி ("உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக.") நமக்கு சமாதானமும், சுகமும் தந்தருள்வார் என்ற விசுவாசத்தோடு இந்த அருள் காலத்தில் அவரை இன்னும் அதிகமாய் கிட்டிச் சேர பரிசுத்த ஆவியானவர் தாமே நம்மை தொடர்ந்து வழி நடத்துவாராக. ஆமென்.



சிலுவை : தன்னல மறுப்புக்கு அழைப்பு

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

மீட்பரும் இரட்சகருமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

“ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னை பின்பற்றகடவன்”. லூக்கா 9:23

கிரேக்கத் தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் தன்னுடைய கேள்வி கேட்கும் திறனாலும், சீர்மிகு சிந்தனையாலும் வாழ்வு சார்ந்த தத்துவப் போதனைகளை இந்த உலகிற்கு வழங்கியவர். தமது புரட்சிகரமான கருத்துக்களால், சமூகத்தில் புரையோடிப்போயிருந்த மூடப்பழக்க வழக்கங்களை மண்மூடி போக செய்தார். சாக்ரட்டீசின் போதனைகளில் மிக முக்கியமானது “உன்னையே நீ அறிவாய்” (know yourself) என்பதாகும்.

கிறிஸ்துவுக்குப் பின் 121-ல் உரோமையின் அரசக் குடும்பத்தில் பிறந்தவர் மார்க்கஸ் அரேலியஸ். ஆண்டோனியஸ் பயஸ்க்குப் பிறகு கி.பி 161-ல் ரோமாபுரியின் அரசனானார். அரசனாக மட்டுமல்ல, கற்றுத் தேர்ந்த ஞானியாகவும் அறியப்பட்டார். அவருடைய போதனைகளில் மிக முக்கியமானது “உன்னையே நீ அடக்கி ஆள்” (Control yourself) இன்னும் பல ஞானிகள் தங்கள் போதனையாக மக்களுக்கு சொன்னது “உன்னையே நீ காத்துக்கொள்” (keep yourself) என்பதாகும்.

ஆனால் ஞானிகளுக்கு எல்லாம் ஞானியும், உலக மீட்பருமான ஆண்டவர் இயேசு கிறிஸ்து மேற்சொன்னவைகளுக்கெல்லாம் மேலான போதனையாகச் சொல்லுவது "உன்னையே நீ மறுத்துவிடு" (Deny yourself) Know yourself, Control yourself, Keep yourself இவைகளில் எல்லாம் ஒரு விதமான சுயநலச் சிந்தனை அடங்கியுள்ளது. ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னலத்தைத் துறக்க விடுத்த அழைப்பில் எவ்விதமான சுயநலச் சிந்தனைகளும் இல்லை. அது முழுமையான தன்னல மறுப்புக்கு சீடர்களை அழைக்கிறது. ஆகவே இயேசு கிறிஸ்து சொன்னார்

"ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னை பின்பற்றகடவன்". லூக்கா 9:23.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவை சுமத்தலுக்கு தொடக்க நிலையாக தன்னல மறுப்பையே முதன்மைப்படுத்துகிறார். சிலுவை தன்னலத்தை துறக்க தரும் அழைப்பை ஏற்று உலகில் நாம் முதன்மையாக கருதுபைவுகளை முழுமையாக துறந்து இயேசு கிறிஸ்துவை நம் வாழ்வின் முதன்மையாகவும் முழுமையாகவும் கொள்வோம்.

தவக்காலம் கிறிஸ்தவ வாழ்வில் தனித்துவம் மிக்க ஒரு காலம். மனிதர்கள் தங்கள் வாழ்வை பரிசோதனை செய்து பார்க்கவும், அவர்களைக் கண்டறியவும், அவைகளைக் களையவும் கடவுளோடும், மனிதரோடும், படைப்புகளோடும், உண்டான பிணக்கை ஒப்புரவாகுதலின் வழியாக நேர் செய்யவும் தங்களை தயார்படுத்திக் கொள்ள, தங்களது ஆன்மீகத்தைப் புதுப்பித்துக் கொள்ள ஆண்டவர் தரும் வாய்ப்பாகும். இத்தகைய புதுப்பித்தலுக்கு சிலுவையின் மாதிரியே அடித்தளமாகவும் அடி நாதமாகவும் விளங்குகிறது. சிலுவையே தன்னல மறுப்புக்கு அடையாளமாகவும், சின்னமாகவும் திகழுகிறது. சிலுவை பாதையில் பயணிப்போம், நிறைவான ஆசீர்வாதத்தை பெற்று கொள்வோம். கடவுள் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக.



# பிரிஸ்கில்லா

பிரிஸ்கில்லா ஒரு ரோமப் பெண்மணி. இவள் கணவன் ஆக்கில்லா ஒரு யூதன். அக்கில்லாவின் சொந்த தேசம் சின்ன ஆசியாவில் உள்ள பொந்து தேசம். இந்தத் தம்பதியார் ரோமாபுரியில் கூடாரத் தொழில் செய்து நல்ல நிலையில் வர்த்தகத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். ரோமப் பேரரசன் கிலவுதிராயன் ரோமரல்லாத யூதர் எல்லோரும் ரோமாபுரியை விட்டு போகும் படி கி.பி 49,50 ஆண்டுகளில் கட்டளை கொடுத்தான். அரசுக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த இந்த தம்பதியர் ஜீவனுள்ள தேவனை விசுவாசித்து, நல்ல வருமானத்தையும் பொருட்படுத்தாமல் ரோமாபுரிக்கு மிகத் தொலைவில் உள்ள ஆகாயவில் உள்ள கொரிந்து பட்டணத்தில் வந்து குடியேறினார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனது இரண்டாவது மிஷனரிப் பயணத்தில் இவர்களைக் கொரிந்துவில் சந்தித்தார். கொரிந்துவில் வாழ்ந்த இவர்கள் தங்கள் வீட்டைப் பவுலுக்கு திறந்து கொடுத்தனர். பவுல் இவர்களோடு தங்கிக் கூடாரத் தொழிலையும் எஞ்சிய நேரங்களில் சுவிசேஷப் பணியையும் செய்தார். ரோமாபுரியில் வாழும் போது ஆண்டவரை ஏற்றுக்கொண்ட இவர்களுக்குத் தங்கள் வீட்டில் தங்கிய பவுல் மூலம் இன்னும் அதிகமாக ஆண்டவரைப் பற்றி அறியவும், விசுவாசத்தில் வளரவும் வாய்ப்பு கிடைத்தது. சுவிசேஷ ஊழியத்தை இணைந்து செய்த தம்பதிகள் இவர்கள். ஆவிக்குரிய ஜீவியத்திலும், குடும்பவாழ்க்கையிலும் மிக நெருக்கமாக இசைந்த இதயங்களுடனும் இணைந்த கரங்களுடனும்

வாழ்ந்தார்கள். மனைவியாய் இருக்கிற ஒவ்வொருவரும் கணவனோடு இணைந்து இவர்களைப் போல செயல்பட வேண்டும் என்பதை இவர்கள் மூலம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் தம்பதிகள் மிகுந்த வேத அறிவு பெற்றவர்கள். வேத வசனங்களைச் சரியாய் பகுத்துப் போதிக்கும் கிருபை பெற்றிருந்தார்கள். அலெக்சந்திரியா பட்டணத்தைச் சேர்ந்த அப்பொல்லோவைப் பற்றி அப் 18:2426 வசனங்கள் கூறுகிறது. வேதத்தில் வல்லவனான அப்பொல்லோவின் பிரசங்கத்தை ஜெப ஆலயத்தில் கேட்ட இந்தத் தம்பதியர், வேத வசனம் வல்லமையுள்ள போதகருக்கு வேத வசனத்தை விவரித்து காட்டும் அளவுக்கு அனுபவம் பெற்றிருந்தார்கள்.

இயேசு வனாந்தரத்தில் பிசாசினால் சோதிக்கப்படும் போது கூட வசனங்களை மாத்திரம் மேற்கோள் காட்டி ஜெபித்தார். இந்த தம்பதியர் பவுலையும் அப்பொல்லோவையும் உபசரித்தது மாத்திரம் அல்ல, அவர்களது சரீர பிரகாரமான தேவைகளையும் நிறைவு செய்து பணிவிடை செய்தார்கள், பவுல் இவர்கள் வீட்டிற்குத் தானாக போனார். அப்பொல்லோவை தங்கள் வீட்டிற்கு இவர்கள் தான் அழைத்துச் சென்றனர், உபசரித்தனர், அந்நியரை உபசரிக்க நாடுகள் என்று எபிரேயர் 13:2 சொல்லுகிறது.

ரோமர் 16:40 பவுல் "என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்" என்று இவர்களை பாராட்டுகிறார். ரோமர் 16:3ல் பவுல் இவர்களைத் தன் உடன் வேலையாட்கள் என்று சொல்வதின் மூலம் பவுலின் ஊழியத்தில் துணையாக இருந்தனர் எனத் தெரிகிறது. அப் 18:1821 வசனங்கள் மூலம் பவுலோடு இவர்கள் சீரிய தேசத்திற்குச் சென்றார்கள் எனத் தெரிகிறது. பவுல் அவர்களை எபேசுவிலே விட்டுவிட்டு மற்ற இடத்திற்கு ஊழியம் செய்யச் சென்ற போது இவர்கள் எபேசுவிலே ஊழியத்தைத் தொடர்ந்தார்கள்.

ரோமர் 16:4ல் பவுல் சொல்லுகிறபடி புற ஜாதிகளின் சபை முழுவதிலும் இவர்களின் பங்கும் உழைப்பும் பெரிதாக இருந்திருக்கிறது. பவுல் யூத மக்களைக் கடந்து புறஜாதிகளிடத்திற்குப் போக அழைக்கப்பட்டேன்

என்று இன வேற்றுமையை உடைத்து புறஜாதிகளின் அப்போஸ்தலனாக விளங்கியது போல இவர்களும் புற ஜாதிகளின் சபையை நேசித்து வசனத்தின் நிமித்தம் பல பாடுகள் அடைந்தாலும் கடைசியில் எந்த ரோமாபுரியை விட்டு ஒரு காலத்தில் துரத்தப்பட்டார்களோ அதே ரோமாபுரிக்கு மீண்டும் வந்தார்கள். கடந்த காலத்தில் கூடாரத் தொழில் செய்த அவர்கள் வீடு இப்போது பரிசுத்தவான்களின் சபை கூடி வருகிற வீடாக மாறிவிட்டது. (ரோ 16:35)

அந்நிய தேசம், பாடுகள் இப்படிப் பல இன்னல்கள் வந்தாலும் துன்பத்தில் துவளாதவர்களாய், இசைந்த உள்ளம் உள்ளவர்களாய், வேத அறிவு உள்ளவர்களாய், விருந்தோம்பலில் சிறந்தவர்களாய், கர்த்தருக்கு அர்ப்பணித்தவர்களாய் வாழ்ந்தார்கள். இவர்களைப் போல தம்பதிகளாய் இருக்கிற நாமும் ஒருமித்து வாழந்து தேவ ராஜ்யத்தைக் கட்ட கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

**J.ஜெனு ஜெபலின்**
ஆயர் அம்மா



# மிஷனரி HENDRY ALFRED கிருஷ்ணப்பிள்ளை

வைணவ குடும்பத்தைச் சார்ந்த H.A.கிருஷ்ணப்பிள்ளை, சிறுவயதிலேயே வைணவ சமயத்தின் தீவிர பக்தனாய் மாறினார். தமிழ் பண்டிதரானார். அப்போது வேதாகமக் கல்லூரி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். ஆனால் கிறிஸ்தவர்களின் தொடர்பை அவர் விரும்பவில்லை. ஒருநாள் ஹகஸ்டபிள் என்ற மிஷனரி ஒரு புதிய ஏற்பாட்டை கிருஷ்ணப் பிள்ளைக்குக் கொடுத்தார். அன்று முதல் தன் வேலையை விட்டு விட்டார். ஆனாலும் மிஷனரியின் அன்பு அதிகமாகச் சிந்திக்க வைத்தது. அந்நாட்களில் அநேக உயர்குல வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களில் தனக்கோடி ராஜு என்பவரும் ஒருவர். அவர் கிருஷ்ணப்பிள்ளைக்கு கிறிஸ்துவின் அன்பைத் தெளிவாக எடுத்துக்கூறினார். ஓர் இரவு கிருஷ்ணப்பிள்ளையால் தூங்க முடியவில்லை. கிறிஸ்துவைப் பற்றிய சிந்தனைகள் அவரை நிறைத்தது. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார், இயேசு கிறிஸ்துவை புகழ்ந்து பாடல்களை எழுதினார். இரட்சணிய யாத்திரீகம், இரட்சண்ய மனோகரம் என்ற அரிய நூல்கள் இவர் எழுதியதே. மாபெரும் மிஷனரிகளான சார்ஜெண்ட், உவாக்கர், ஏமிகார்மைக்கேல் மற்றும் பலருக்கு தமிழ் கற்றுக் கொடுத்தார். இவர் 3.2.1900 ஆம் நாள் ஆண்டவரிடம் சென்றார்.



# TRUE WORSHIP THAT *Liberates*

How many of us have felt that we are perfect in our worship because we attend church every Sunday, pray before our food, pray before we leave our home. If life is going well we think we can handle our problems why should we spend long hours in Worship and prayer? Paul attempts to tell the church that True worship is not a ritual act. True worship is a living sacrifice we must strive to transform our Sunday experience into leading lives that are pleasing to God.

The act of Glorifying God and God only is true worship. In Exodus 33:7-11 we read that Moses created a tent calling it “tent of Meeting”. Anyone inquiring about God would go into the tent. When Moses went into the tent a pillar of cloud would descend down and stay at the entrance of the tent. Whenever people saw that pillar they stood up and worshipped. The Lord would speak to Moses Face to face like a friend. From this we see that people saw the cloud and worshipped. Many of us feel that our faith is private but it is not so. Faith is personal but not a private affair. If our faith has personally transformed someone it is definitely not private. This is what the passage

in exodus says. Our faith must be an instrument to transform atleast one person who will be led to worship a true and living God.

Jesus tells us that there are two types of worship one is true and the other false. Today's worshippers are preoccupied with the happenings at the worship place like the songs that are sung, the music that is played, the clothes that are worn, who is there and who is not there etc. How many of us have grasped the concepts from the sermon and tried to lead our lives in a way that is pleasing to God? When we pay attention to worldly emotions we completely miss the point Jesus tells us in John 4:23 "But the hour is coming, and now is here, when the true worshipers will worship the Father in spirit & truth, for the Father is seeking such people to worship him."

How can we become true worshippers? The Holy Spirit within us must empower us which means we must pray that the Holy Spirit will help us to worship rightly. We must worship in spirit and truth that is our worship must not only involve our physical bodies but our heart and mind. The author of Hebrews reminds believers to strive for "the holiness without which no one will see the Lord" (Heb.12:14), and Jesus says that it is the "pure in heart" who shall "see God" (Matt 5.8)

True worship opens the heaven, touches the living God and transforms the worshipper into the image and likeness of God. True worship liberates mankind from bondage and exalts him/her to the highest level of life in this world. True worship alters the heart of humanity and therefore society, culture and the world itself.

Contributed By

*Nancy Augustine*



# குழந்தை வளர்ப்பு - 3

**"பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகதபடி அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்."** (கொலோசெயர் 3:21).

### மானிடக் குழந்தைகளின் இயலாமை

ஒரு மானிடக் குழந்தையால் பிறர் தயவில்லாமல் இவ்வுலகில் வாழ. (A human child is totally a helpless infant). மானிடக் குழந்தைகள் பிறக்கும்போது எவ்வகை உலக ஞானமும் அதற்கு இருப்பதில்லை. (A human infant is completely without any knowledge).

இத்தகைய குறைபாடுகளுடன், மானிடக் குழந்தை தன் வாழ்க்கைப் பயணத்தைத் துவக்குவதால், பல பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை மனிதர்களாகவே எண்ணுவதில்லை. (To many adults, children are not really people). குழந்தைகளை ஆளாகக் (Person) கருதாமல். பொருளாகவே (Object) கருதுகிறார்கள். குழந்தைகளின் உணர்வுகளை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை.

பிறரால் கோபமூட்டப்பட்டால் அல்லது வெறுப்பூட்டப்பட்டால் அதற்குப் பதில் நடவடிக்கை (Recourse) எடுக்க, பெரியவர்களுக்குப் (Adults) வழிவகைகளுண்டு. அவர்களை எதிர்த்து நடவடிக்கைகள் எடுக்கலாம். அல்லது அப்படிப்பட்ட மனிதர்களை விட்டு விலகிச் சென்றுவிடலாம்.

அதில்லையென்றால், தனக்குப் பிடித்த மனிதர்களைத் தெரிவு செய்து, அவர்களுடன் நட்புடனும், உறவுடனும் வாழலாம்.

குழந்தைகளுக்குப் பெற்றோர்கள்தான் பாதுகாப்பு. ஆனால், பெற்ற தாயாலோ அல்லது தந்தையாலோ கோபமூட்டப்படும் (Parental provocation) குழந்தையின் நிலையை எண்ணிப் பாருங்கள்! பெற்றோருக்கு எதிராகப் பிள்ளைகளால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?

அவர்களால் பெற்றோர்களை எதிர்க்கவும் முடியாது; வீட்டைவிட்டால் அவர்களுக்கு வேறு போக்கிடமும் கிடையாது. சில வேளைகளில் வீட்டைவிட்டு வெளியேறும் எண்ணம் வலுப்பெறும். ஆயினும், வாலிப வயது வருமுன், மானிடக் குழந்தைகளுக்கு இப்பரந்த உலகில் பாதுகாப்பு இன்மையால், வேறு வழியின்றி, கோபத்தை உள்ளடக்கிக் கொண்டு வெறுப்புடன் வீட்டில் வாழுவர்.

தங்களுடைய அன்றாட, அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமான பணம் ஈட்டும் வழிவகையைக் காணும் திறனின்மையால், பெற்றோரைச் சார்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தால், உள்ளப் புழுங்கலுடன் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பார்கள்.

இயலாமையால் எதிர்நடவடிக்கை எடுக்காவிட்டாலும், வெறுப்பும், பழியுணர்வும் குழந்தைகளின் உள்ளங்களில் ஆழப் பதிவதைத் தவிர்க்க இயலாது. அக்குழந்தைகள் வளர்ச்சியுற்று, பெரியவர்களாகி “தற்சார்பு நிறைவு” (self-sufficient) நிலையடைந்தவுடன், அதுகாறும் புதையுண்டு கிடந்த பழியுணர்வு அவர்களால் உணரப்படாமலே, பல ரூபங்களில் வெளிப்படுகிறது.

## பெற்றோர் பிள்ளை உறவு

பெற்றோர்களை மட்டுமல்ல, தங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் ஆசிரியர்கள், சக மாணவர்கள், நண்பர்கள், உடன் ஊழியர்கள், உறவினர்கள் போன்ற மற்றவர்களையும், தாங்கள் நடத்தப்பட்ட விதத்தின்படியே பின்னாளில் நடத்துகின்றனர்.

ஆகையால், குழந்தைகளை நாம் பெற்ற பிள்ளைகள்தானே என்று அலட்சியப்படுத்தாதீர்கள்; அவர்களையும் மரியாதையுடன் நடத்துங்கள்.

“பெற்றோர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைகளை மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டுமா?” என வியப்புடன் கேட்கிறீர்களா?

இதற்கு என் பதில் “ஆமாம்.... ஆமாம்” என்பதுதான்.

பெற்றுவிட்டதால் பிள்ளைகள் உங்கள் அடிமைகள் அல்ல. உணர்வுள்ள உயிர் ஜீவிகள். இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட மானிடப் பிரஜைகள். வருங்காலத்தில், உலகில் பொறுப்பான பொறுப்புகளை ஏற்கப்போகும் தலைவர்கள். நாளையச் சந்ததியினரின் பெற்றோர்கள் (The parents of tomorrow's children). ஆகவே கவனமாகக் கையாளுங்கள்.

இளம் பிராயத்தில் பெற்றோர்களால் ஏற்பட்ட அவமானங்கள். அவமரியாதைகள், ஏளனங்கள், கேட்ட சுடுசொற்கள், சந்தித்த இகழ்வுகள் யாவும் உள்மனதிலே, ஆழ்வடுக்களாகப் பதிந்து, பின் நாட்களிலே அவற்றினையே மற்றவர்களுக்குச் பரஸ்பரபழிக்குப்பழியாக தங்களை அறியாமலே திருப்பிச் செயல்படுத்துகின்றனர். ஆனால், பெற்றோர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் வளரும் குழந்தைகள், எதிர்காலத்தில் பெற்றோர்களிடமும், மற்றவர்களிடமும் நல்லுறவு கொண்டிருக்கும்.

ஒரு குழந்தைக்கு, தன்னுடைய பெற்றோர்களால் கௌரவத்துடனும், மரியாதையுடனும் நடத்தப்படுவதைவிட வேறென்ன மகிழ்ச்சி இருக்க முடியும்? அதைப் போன்று தம் மக்கள் தம்மைவிட அறிவுசால் சிறந்த மக்களாக இந்த சமுதாயத்தில் திகழ்கிறார்கள் என்பதைவிட, பெற்றோர்க்கு இன்பமளிக்கும் விஷயம் இவ்வுலகில் வேறென்னவாக இருக்கமுடியும்?

“தம்மின் தம்மக்கள் அறிவுடமை, மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது” (திருக்குறள் 68).

(பொருள்: தம்மைவிட, தாம் ஈன்றெடுத்த மக்கள், இப்பாரில் வாழும் உயிர்களுக்கெல்லாம் இன்பமளிக்கும் அறிவாற்றலில் சிறந்து விளங்குவதைக் காண்பதிலும் பெரிய இன்பம் இவ்வுலகில் வேறேது).

பெற்றோர்களால் தாங்கள் மதிக்கப்படுகிறோம், கௌரவிக்கப் படுகிறோம் என்ற உணர்விற்கு மேலான மகிழ்ச்சி பிள்ளைகளுக்கு வேறேதும் இல்லை. பிள்ளைகளின் கருத்துக்களுக்கும், அறிவிற்கும் நீங்கள் மதிப்பளித்தால், உங்கள் கருத்துக்களுக்கும், அறிவிற்கும் அவர்களும் மதிப்பளிப்பார்கள் என்பது நிச்சயம். (If show respect for their opinion and knowledge, you are likely to see them reciprocate by showing respect for your opinions and knowldge.)



# இந்தியாவுடன் வாணிபமும் ஐரோப்பியத் திருச்சபைகளும்

### ஆங்கிலிக்கன் திருச்சபை

போர்ச்சுக்கல், நூறாண்டுகளுக்கு மேலாக வலிமை மிக்க நாடாக இருந்தது. கீழ் நாடுகளுக்குச் செல்லும் கடல் மார்க்கங்கள் இதன் கட்டுப்பாட்டில் இருந்தன. மற்ற ஐரோப்பிய நாடுகளும் வலிமைமிக்கவைகளாக இப்போது மாறின. ஆசிய நாடுகளின் செல்வத்தைப் பகிர்ந்துகொள்வதில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஹாலந்து, டென்மார்க் இடையே போட்டிகள் ஏற்பட்டன. இவர்களும் தங்களுடைய வாணிப மையங்களை இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் ஏற்படுத்திக் கொண்டனர். ஆங்கிலேயருக்குச் சொந்தமான கிழக்கிந்தியக் கம்பெனி 1600ல் தோற்றுவிக்கப்பட்டது. வாணிபக் கப்பல்களில் பணியாற்ற ஆங்கிலிக்கன் ஆயர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் கப்பல்களில் பயணம் செய்த பயணிகள், போர் வீரர்களின் ஆன்மிகத் தேவைகளை நிறைவு செய்தனர். வாணிப மையங்களில் இருந்த வணிகர்கள், போர்வீரர்கள் ஆகியோரின் ஆன்மிகத் தேவைகளையும் கருத்தில்

கொண்டு அவ்விடங்களுக்கும் ஆயர்களை நியமித்தனர். இவர்கள் இந்தியர்களுக்கு நற்செய்தியை அறிவிக்க அனுமதிக்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலை ஏறத்தாழ ஒரு நூறாண்டுக் காலமாக இருந்தது. இருப்பினும் கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலமாகப் புராட்டஸ்டண்ட் திருச்சபையைக் குறித்து இந்தியர்கள் அறிந்தனர். சென்னை புனித ஜார்ஜ் கோட்டை உள்ளே தூய மேரி ஆலயம் 1680ல் கட்டப்பட்டது. ஆங்கிலிக்கன் திருச்சபை சென்னைக்கு வந்தது என்பதற்கு இந்த ஆலயம் சான்றாக இருக்கின்றது. இதுவே இந்திய நாட்டிலுள்ள மிகப்பழமையான புராட்டஸ்டண்ட் ஆலயமாகும்.

## முதல் இந்திய ஆங்கிலிக்கன் கிறிஸ்தவர்

1612ல் டச்சுக் கப்பலின் தலைவர் ஒருவர், வங்காளத்திலிருந்து தாம் அழைத்து வந்திருந்த இரு சிறுவர்களை, ஆங்கிலேயக் கப்பலின் தலைவர், ஆயர் முன் நிறுத்தினார். அச்சிறுவர்களில் ஒருவனுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுத்து. அவனை லண்டன் மாநகரில் இருந்த பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். அ சிறிஸ்துவை ஏற்றுக்கொண்டான். அங்கு அளிக்கப்பட்டு ஆங்கிலிக்கன் திருச்சபையில் முதலாம் ஜேம்ஸ் அரசர் அவனுக்குப் பேதுரு என்று சேர்த்துக்கொள்ளப்பட்டாள் பெயரிட்டார். புராட்டஸ்ட திருச்சபையில் அங்கத்தினரான முதல் இந்தியர் இவரே. நற்செய்தினை இந்தியர்களுக்கு அறிவிப்பதற்கென்று இவரை மீண்டுமாக இந்தியாவுக்கு அழைத்து வந்தனர். அதன் பிறகு அவர் என்ன ஆனார் என்பது குறித்து அறிந்துகொள்ள ஆவணங்கள் (Records) ஏதுமில்லை.

## லூத்தரன் திருச்சபை

டென்மார்க் 1620ல் தரங்கம்பாடியில் ஒரு வணிக மையத்தைத் தொடங்கியது. தஞ்சாவூர் ராஜாவிடம் இருந்து ஒரு சிறிய நிலப்பரப்பை, டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வாடகைக்கு அமர்த்திக் கொண்டது. இந்நிலப்பரப்பின் நீளம் எட்டு கிலோ மீட்டர். அகலம் ஐந்து கிலோ மீட்டர் ஆகும். அந்நிலப்பரப்பின் ஒருபுறம் கடலும் மற்ற மூன்று பக்கங்களும் அந்த அரசின் எல்லைகளாகவும் இருந்தன. இச்சிறிய நிலப்பரப்பில் டென்மார்க் மக்களின் குடியேற்றம் தோன்றியது. இங்கு வந்த டென்மார்க் மக்களில் பெரும்பான்மையானவர்கள் லூத்தரன்

திருச்சபையைச் சேர்ந்தவர்கள். எனவே இவர்களுக்கு ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டது. லூத்தரன் ஆயர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அக்குடியேற்றத்திலிருந்த ஐரோப்பிய வணிகர், போர் வீரர், மற்ற பணியாளர் ஆகியோரின் ஆனமிகத் தேவைகளை நிறைவு செய்துவந்தனர். போர்ச்சுக்கீசியருக்கு என ஒரு உரோம கத்தோலிக்க ஆலயமும் இருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தென்னிந்திய வணிகம் போர்ச்சுக்கல் நாட்டின் ஆதிக்கத்திலிருந்தது என்று இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் கண்டோமல்லவா? போர்ச்சுக்கீசிய வாணிப மையங்களில் பணியாற்றிய அநேக போர்ச்சுக்கீசியர், இந்தியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டனர். அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் “போர்ச்சுக்கீசியர்” என்றழைக்கப்பட்டனர்.

## மூன்று திருச்சபைகள்

திருச்சபையின் முப்பெரும் கிளைகளான கத்தோலிக்க, ஆர்த்தொடாக்ஸ், புராட்டஸ்டண்ட் திருச்சபைகள், இந்தியாவிலும் தோன்றின. இவற்றில் கத்தோலிக்கத் திருச்சபை மாத்திரமே இந்தியரின் ஆன்மிக வாழ்க்கையில் ஆர்வம் காட்டியது. நூறாண்டுகளுக்குப் பிறகே, லூத்தரன் திருச்சபை மிஷனெரி ஊழியத்தில் ஆர்வம் காட்டியது. இந்தியாவுக்கு மிஷனெரிமாரை அனுப்பிய முதல் புராட்டஸ்டண்ட் திருச்சபை, லூத்தரன் திருச்சபையே ஆகும்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

யோபு 1-15

1. கர்த்தர் யோபுவைக் குறித்து சாத்தானிடம் என்ன சாட்சி கொடுத்தார்?
2. யோபுவின் துக்கம் எப்படிப்பட்டது?
3. சிறியவனும், பெரியவனும் அங்கே எப்படி இருக்கிறார்கள்?
4. "ஞானம் அடையாமல் சாய்கிறார்களே" யார் சொன்னது?
5. கோபம் யாரைக் கொல்லும்?
6. வருத்தம் எதிலிருந்து முளைக்கிறதுமில்லை?
7. "எது, தனக்கு முன்பாக அணியணியாய் நிற்பதாக" யோபு சொல்கிறார்?
8. யார் வார்த்தைகள் பலமான காற்றைப் போலிருக்கும்?
9. தேவன் எதை மறைத்துப் போடுகிறார்?
10. வாய்ச்சாலகன் நீதிமானாய் விளங்குவானோ?யார் சொன்னது?
11. உத்தமனாகிய நீதிமான் என்ன பண்ணப்படுகிறான்?
12. இது சாம்பலுக்குச் சரி?
13. மனிதனுக்கு நோவும் துக்கமும் எதுவரைக்கும் உண்டு?
14. தேவன் யாரை நம்புகிறதில்லை?
15. துன்மார்க்கன் எதுவரைக்கும், எதனால் வாதிக்கப்படுகிறான்?

கடந்த பிப்ரவரி மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Stella Jeshwanth
2. Mrs.Selina Stephen
3. Mrs.Kavitha Johnson
4. Mrs.Thangamani Anbalagan
5. Mrs.Sheela Hendry
6. Mrs.Merlin Jebahar
7. Mrs.Ruby Jeyaseelan
8. Mrs.Baby Jesudass
9. Mrs.Benisha Christabel
10. Mrs.Esther Kala Ashok
11. Mrs.Rajini Julius

**Children's Corner Colouring**

1. San Hedrin
2. Andrea Elizabet

# KID'S CORNER

## BIBLE BUZZ

Check out **Acts 9:1-20** and complete the story of Saul:

**1** Before knowing Jesus, Saul used to hurt Christians. He even got a letter from the

______________________

that would let him arrest any Christians he found.

**2** As soon as he got the letter, Saul set off on his mission. But as he neared __________________, a bright light shone around and blinded him. Then, he heard the voice of ______________! Jesus spoke to Saul and it completely changed him.

**3** Then, God told _____________ to visit Saul and help restore his vision. So Ananias went to Saul's house. As he spoke to Saul, something like scales fell off Saul's eyes and he could see again. Then, Saul got _________________.

(APBSDETI)

**4** Soon, Saul began preaching about __________________. He stopped hurting Christians and instead, started helping them. After meeting Jesus, he was completely new person!

## BIBLE VERSE

Use **2 Corinthians 5:17(NIV)** to unscramble these words:

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

new the here has new is if in gone anyone creation old Christ has the come the is Therefore

Knowing Jesus changes our lives, too. Look up **2 Corinthians 5:17-21** to know more!




+971 50 703 2150

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.



## MAZE

Help Ananias find Saul.



# Birthday & Wedding day Celebrants

1st March
MISS JULIA
MRS KAVITHA
MASTER JEFIN ANIVEL
3rd March
MASTER ABINAY JOEL BROWN
MR R.SHALOM SARATH - AJMAN
4th March
MISS JEFFI KOIL RAJ
6th March
MR JOHN CHITTY BABU G.
7th March
MRS JULIE SURESH S.
MR VIJAY BALAKRISHNAN (ABU SHAGARA)
MRS ANNIE MARY C. B.
MASTER JASINTH BOANERGES
9th March
MR PRASHANTH J.
MR SUNDARA RAJAN R.
10th March
MRS SELVI J.
MASTER RANOLD
MASTER M.JACK
11th March
MISS CELINE MALARVATHANI
12th March
MISS LAKSHITHA PREETI RAJA K.
14th March
MISS BRIONNA KEZIAH S.
15th March
MRS CELINE VANDHANA
MRS BABITHA ROBERT

16th March
MASTER JOSHUA SAMUEL RAJ
MR SOLOMAN VIJAY ANAND S.
17th March
MRS ARCHANA
18th March
MR SATHISH RAJ KUMAR
MASTER JOHAN
MRS SHEELA BELSON
19th March
MRS JEMI POORANI
20th March
MISS CATHERINE JUDITH
MRS ANITA SAMRAJ
MISS SHARON EBENEZER K.
MR NARAYANAN SUNDARESAN
21st March
MASTER JERSHON PAUL.L
MISS STENICA JERALIN
22nd March
MRS PRAMILA
23th March
MRS RUTH PRITHIKA STANLEY
24th March
MASTER JEFFERY PAULDARAN
MISS LINCY RODA FELISHIYA S.
MR MAHESH MICHAEL RAJ
25th March
MR DAVID PAUL RAJ
MR ARNOLD DEV AUGUSTINE
MRS PUNITHA
MASTER NEEL JOSHUA

**26th** March
MRS SELVAPRIYA
MISS GENAL JESSICA ROSY
**27th** March
MR MURALI
MR VIMAL RAJKUMAR.S
**28th** March
MASTER CHEMPARITHI
MRS MARY JULIET
**30th** March
MRS THAVAMANI
MRS BERYL JENEFA
MR SAM STALIN MANOVA SOUNDAR
**31st** March
MR SURESH JAYAKUMAR D.

## Wedding Anniversary

**4th March**
MR & MRS PREM DAVID D. V.
MR & MRS SOLAI

# DAILY BIBLE READING MARCH 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 FRI | மீகா /MICAH 1:1-16 | மீகா /MICAH 2:1-13 |
| 02 SAT | மீகா /MICAH 3:1-12 | மீகா /MICAH 4:1-13 |
| 03 SUN | சங்கீதம் /PSALMS 67 | சங்கீதம் /PSALMS 68 |
| 04 MON | மீகா /MICAH 5:1-15 | மீகா /MICAH 6:1-16 |
| 05 TUE | மீகா /MICAH 7:1-20 | நாகூம் /NAHUM 1:1-15 |
| 06 WED | நாகூம் /NAHUM 2:1-13 | நாகூம் /NAHUM 3:1-19 |
| 07 THUR | ஆபகூக் /HABAKKUK 1:1-17 | ஆபகூக் /HABAKKUK 2:1-20 |
| 08 FRI | ஆபகூக் /HABAKKUK 3:1-19 | செப்பனியா /ZEPHANIAH 1:1-18 |
| 09 SAT | செப்பனியா /ZEPHANIAH 2:1-15 | செப்பனியா /ZEPHANIAH 3:1-20 |
| 10 SUN | சங்கீதம் /PSALMS 69 | சங்கீதம் /PSALMS 70 |
| 11 MON | ஆகாய் /HAGGAI 1:1-14 | ஆகாய் /HAGGAI 2:1-23 |
| 12 TUE | சகரியா /ZECHARIAH 1:1-21 | சகரியா /ZECHARIAH 2:1-13 |
| 13 WED | சகரியா /ZECHARIAH 3:1-10 | சகரியா /ZECHARIAH 4:1-14 |
| 14 THUR | சகரியா /ZECHARIAH 5:1-11 | சகரியா /ZECHARIAH 6:1-15 |
| 15 FRI | சகரியா /ZECHARIAH 7:1-14 | சகரியா /ZECHARIAH 8:1-23 |
| 16 SAT | சகரியா /ZECHARIAH 9:1-17 | சகரியா /ZECHARIAH 10:1-12 |
| 17 SUN | சங்கீதம் /PSALMS 71 | சங்கீதம் /PSALMS 72 |
| 18 MON | சகரியா /ZECHARIAH 11:1-17 | சகரியா /ZECHARIAH 12:1-14 |
| 19 TUE | சகரியா /ZECHARIAH 13:1-9 | சகரியா /ZECHARIAH 14:1-21 |
| 20 WED | மல்கியா /MALACHI 1:1-14 | மல்கியா /MALACHI 2:1-17 |
| 21 THUR | மல்கியா /MALACHI 3:1-18 | மல்கியா /MALACHI 4:1-6 |
| 22 FRI | மல்கியா /MATTHEW 1;1-25 | மத்தேயு /MATTHEW 2:1-23 |
| 23 SAT | மல்கியா /MATTHEW 3:1-17 | மத்தேயு /MATTHEW 4:1-25 |
| 24 SUN | சங்கீதம் /PSALMS 73 | சங்கீதம் /PSALMS 74 |
| 25 MON | மத்தேயு /MATTHEW 5:1-47 | மத்தேயு /MATTHEW 6:1-34 |
| 26 TUE | மத்தேயு /MATTHEW 7:1-29 | மத்தேயு /MATTHEW 8:1-34 |
| 27 WED | மத்தேயு /MATTHEW 9;1-38 | மத்தேயு /MATTHEW 10:1-42 |
| 28 THUR | மத்தேயு /MATTHEW 11:1-30 | மத்தேயு /MATTHEW 12:1-50 |
| 29 FRI | மத்தேயு /MATTHEW 13:1-58 | மத்தேயு /MATTHEW 14:1-36 |
| 30 SAT | மத்தேயு /MATTHEW 15:1-38 | மத்தேயு /MATTHEW 16:1-28 |
| 31 SUN | சங்கீதம் /PSALMS 75 | சங்கீதம் /PSALMS 76 |

# ஆராதனை தியானப் பொருள்

## மார்ச் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>March-3<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 2 இராஜாக்கள் 20:1-11<br>1 தெசலோ 5:12-22<br>மாற்கு 7:24-30<br>சங்கீதம் 116 | இறைவேண்டலில் நிலைத்திருத்தல்<br>PRESISTENCE IN PRAYER |
| ஞாயிறு<br>March-10<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 3:111-8<br>அப்போஸ் 16:25-34<br>லூக்கா 13:10-17<br>சங்கீதம் 137 | விடுவிக்கும் உண்மையான வழிபாடு<br>TRUE WORSHIP THAT LIBERATES |
| ஞாயிறு<br>March-17<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | உபாகமம் 18:15-22<br>2 கொரிந்தியர் 1:3-11<br>லூக்கா 18:35-43<br>சங்கீதம் 73 | சிலுவை : மெசியா யுகத்தின் ஒரு புதிய திருக்காட்சி<br>CROSS: A NEW VISION OF THE MESSIANIC AGE |
| ஞாயிறு<br>March-24<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 56:1-8<br>1 கொரிந்தியர் 3:16-23<br>மத்தேயு 21:1-17<br>சங்கீதம் 24 | ஓசன்னா : கோவிலில் புதிய அரசர்<br>HOSANNA: NEW KING IN THE TEMPLE |
| ஞாயிறு<br>March-31<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 14:5-31<br>கொலோசெயர் 3:1-11<br>மத்தேயு 28:1-10<br>சங்கீதம் 118:14-29 | உயிர்ப்பு : மீட்பின் மகிழ்வைக் கொண்டாடுதல<br>RESURRECTION : CELEBRATING THE JOY OF SALVATION |